
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வரலாறு

# தொல்லியல்



# கடல் வணிகத்தில் ஏற்றுமதி இறக்குமதி பொருள்கள்

# *Export and Import Commodities in Maritime Trade*

**செ.கணிமார்க்சென்,** முனைவர் பட்ட ஆய்வாளர், கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல், தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் -10

***S.Kanimarksen,*** *Ph.D Research Scholar, Maritime History* & *Maritime Archaeology, Tamil University, Thanjavur - 10*

***Abstract:*** *Tamil Nadu's export-import trade during the Sangam and medieval periods, highlighting maritime connections with Sri Lanka, Rome, and Southeast Asia. Exports included pepper, cardamom, pearls, textiles, iron, and precious stones, while imports comprised wine, glassware, silver, paper, and luxury fabrics. Archaeological excavations, inscriptions, coins, and literary references confirm these exchanges, reflecting both economic and cultural influence. Ports such as Poompuhar, Musiri, and Kaveripattinam served as hubs of international commerce. Tamil merchants played a pivotal role in shaping transoceanic trade networks, sustaining long-standing foreign relations, and spreading cultural values across diverse regions.*

***Key words :*** *Sangam Age, Export, Import, Trade, Sri Lanka, Romans, Ports, Coins, Inscriptions, Archaeology, Cardamom, Silk, Beads, Iron, Bronze, Coconut.*

**ஆய்வுச் சுருக்கம் :** சங்ககாலம் முதல் பாண்டியர், சோழர், சேரர் ஆகியோரின் கடல்சார் வணிகம் இலங்கை, ரோம, கிழக்காசிய நாடுகளுடன் வணிக நடவடிக்கை இருந்திருந்தது. மிளகு, ஏலம், மணிகள், பட்டு, இரும்பு போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன; மது, கண்ணாடி, வெள்ளி, விலை உயர்ந்த துணிகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. தொல்லியல் சான்றுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவை இந்த வணிகத் தொடர்புகளை உறுதிப்படுத்துகின்றன. தமிழர் வணிகர்கள் கடல்சார் வணிகத்தில் முக்கிய பங்கு வகித்து, பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் உலகளவில் பரப்பினர்.

**திறவுச் சொற்கள்:** சங்ககாலம், ஏற்றுமதி, இறக்குமதி, வணிகம், இலங்கை, ரோமனியர், துறைமுகம், நாணயங்கள், கல்வெட்டுகள், தொல்லியல், மிளகு, பட்டு, மணிகள், இரும்பு, பித்தளை, தேங்காய், ஏலக்காய்

**அறிமுகம் :** தமிழ்நாட்டின் வரலாற்றில் வணிகம் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக இருந்தது. உள்நாட்டு வணிகத்தைத் தாண்டி வெளிநாடுகளுடனும் வணிகம் நடைபெற்றது என்பதை தொல்லியல் சான்றுகள், கல்வெட்டுகள், இலக்கியங்கள், நாணயங்கள் ஆகியவை உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக இலங்கையுடனான வணிகத்

தொடர்புகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே காணப்படுகின்றன. பௌத்த மதம் அறிமுகமான பின்னரும், தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையே வணிகம் தொடர்ந்தது. பாண்டிய நாட்டிற்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடையே நடைபெற்ற முத்து, சங்கு போன்ற இயற்கை வளங்களின் பரிமாற்றம், இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தியது. மேலும், கிரேக்கர் மற்றும் ரோமானியர் போன்ற வெளிநாட்டு வணிகர்களும் தமிழகத்துடன் தொடர்பு கொண்டனர். ரோமர் நேரடியாக இலங்கைக்கு வராமல், தென்னிந்திய துறைமுகங்களில் இலங்கைப் பொருட்களை பெற்றனர். சங்ககாலத்தில் பரதவர் என அழைக்கப்பட்ட வணிகர்கள் குதிரை வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தனர். மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் குதிரை வர்த்தகத்தின் பரவலைக் குறிப்பிடுகின்றன. தமிழகத்தின் புகார், கிழ்வெளி, கீழையூர் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட படகுத்துறைகள், கடல்சார் வணிகத்தின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. பல்லவர் காலத்தில் பூம்புகாரில் வடஇந்திய வணிகர்கள் வர்த்தகம் செய்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. கொடுமணல், வானகிரி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இந்த வணிகம் பொருளாதார வளர்ச்சியையும், பண்பாட்டு பரிமாற்றத்தையும் ஏற்படுத்தியது. மிளகு, ஏலம், பட்டு, மணிகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன; மது, கண்ணாடி, வெள்ளி, தாள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. வியன்னா பேப்பரஸ் வணிக உடன்படிக்கை, சேரர் மற்றும் ரோமானியர் இடையேயான உறவுகளை வெளிப்படுத்துகிறது. இதனால், தமிழ்நாட்டின் இடைக்கால வணிகம் உலகளாவிய பரிமாற்றங்களை உருவாக்கி, தமிழகத்தை சர்வதேச வணிகத்தில் முக்கிய மையமாக மாற்றியதை இக்கட்டுரை விவரிக்கிறது.

**வெளிநாடுகளில் வணிகம்**

வணிகத்தை உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் வணிகம் செய்துள்ளனர் அந்த வகையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இலங்கைக்கு தமிழகத்திற்கும் இடையே வர்த்தக தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் பாலி சிங்கள தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் ஒரு பகுதியை கருதும் அளவிற்கு நெருங்கிய ஒற்றுமை உடையன ஆனால் பொ.ஆ.மு.மூன்றாம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாகியதை தொடர்ந்து இலங்கையில் வர்த்தகமும் பண்பாடும் பாலி மொழியில் கூறப்பட்டுள்ளன. இந்நிலையில் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் தமிழகத்தின் தமிழகத்தில் உடனான பாரம்பரிய வர்த்தக தொடர்பு பௌத்த மதத்தின் வருகையின் பின்னரும் தொடர்ந்ததை கோடிட்டு காட்டுகின்றன. (நா. அதியமான், பா.ஜெயக்குமார், தமிழக கடல்சார் வரலாறு, ப.19) இக்காலத்தில் இலங்கை தமிழக வர்த்தகம் வளர்ச்சி அடைய பல காரணிகள்

சாதகமாக இருந்தன இரு நாடுகளையும் ஆழம் குறைந்த ஒடுங்கிய பாக்கு நீரினை பிரித்து நின்றாலும் இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட வர்த்தக தொடர்பை காட்டுகின்றன. பாண்டிய நாட்டிற்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடைப்பட்ட கடல் பிராந்தியத்தில் நடைபெற்ற முத்து சங்கு குளித்தலும் இலங்கையில் இயற்கையாக கிடைத்த வணிக பொருளாகும்.

மேலும் பொ.ஆ.ஒன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கிரேக்க ரோம நாடுகள் இலங்கை வந்ததும் தமிழகத்துடன் இணைந்து வளர்ச்சி அடைந்துள்ளன இவ்வர்த்தகத்தில் ரோமானியர்கள் இலங்கைக்கு வராமலேயே தென்னிந்திய துறைமுகங்களில் இலங்கை பொருட்களை பெற்றனர். (*Schoff.W.H., Travel and t=Tread is the Inidan Ocean by a Merchant in I st Centaury, p.209* )அதேபோல் இலங்கைக்கு தேவையான பொருட்கள் தென்னிந்திய துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழக வர்த்தகத்தில் தொடக்க கால சான்றாக பெருங்கற்கால பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட சில வகை மட்பாண்டங்கள் கல்மணிகள் என்பவற்றை குறிப்பிடலாம். (*Connigham, R.A.E. Passage to India Anuradhapuram and ist Early use of Bahmi Script in Cambridge Archaeological Journal Vol. VI, pp.73-97* ) சங்க கால வர்த்தகம் தொடர்பாக இலங்கையில் கிடைத்துள்ள முக்கிய சான்றுகளுள் பிராமி கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கன. இக்கல்வெட்டுகள் வணிகர் பற்றியும் வணிக சமூகத்தை பற்றியும் கூறுகின்றன. (*I Mahadevan, Recent Epigraphical Evidence for Ancient Tamil Contacts Abroad , Pp.1-26*) இலங்கையில் கிடைக்கப்பெற்ற பிராமி கல்வெட்டுக்கள் 21 ல் பரத என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பெயர் பரதவர் பரவர் என்று அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் தென் தமிழகத்திலும் இலங்கையிலும் வாழும் வரத சமூகத்தினர் ஆவர். இவர்கள் வணிகர்களாகவும் கப்பல் தலைவனாகவும் அரச தூதுவனாகவும் கூறப்படுகின்றனர். சங்ககாலத்தில் பரதவரின் வெளிநாட்டு வர்த்தகத்தில் குதிரை முக்கிய வர்த்தக பொருளாக திகழ்ந்தது.

பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் மலை நாட்டு குதிரைகளும் வட இந்திய குதிரைகளும் தென்னிந்திய துறைமுகங்களுக்கு கொண்டுவரப்பட்டதாக கூறுகின்றன. மதுரைக்காஞ்சி பாண்டியநாடு நெடுகிலும் குதிரை வர்த்தகம் நடந்ததாக கூறுகிறது. (நா. அதியமான், பா.ஜெயக்குமார், தமிழக கடல்சார் வரலாறு, ப.22- 23)இலக்கியங்கள் தொல்லியல் சான்றுகள் மற்றும் கல்வெட்டு சான்றுகள் போன்றவை வெளிநாட்டு வர்த்தக தொடர்பை எடுத்துக்காட்டுவது போல் சங்க கால வர்த்தகம் தொடர்பான இலங்கையில் கிடைத்த மற்றொரு சான்று நாணயங்கள் ஆகும். 1917 இல் முதன்முறையாக கந்தரோடையில் சங்ககால பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் கிடைக்கப்பெற்றன. (ப.புஷ்பரத்தினம், பூ நகரில் கிடைத்த அரிய சங்க கால நாணயங்கள், ஆவணம் இதழ்-9, ப.114-119) இந்நாணயம் புத்த மதத்தை சார்ந்தவயாகும். ஆனால் அண்மை காலங்களில் மன்னரின் உருவம் பெயர் குல குறியீடு குறித்த

நாணயங்களில் பல கருவூர் காவிரி பூம்பட்டினம் மதுரை பொற்கை அழகன்குளம் போன்ற இடங்களில் கிடைத்துள்ளன பெரும்பாலான நாணயங்கள் தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறுவதினால் இவை வெளிநாட்டு வணிகத்திற்கு பயன்படுத்தப்படவில்லை என்பர் ஆனால் அண்மையில் தாய்லாந்தில் புலி உருவம் பொறித்த சோழ நாணயம் கிடைத்துள்ளது. ஆனால் தமிழ்நாட்டைத் தவிர தமிழ்நாட்டிற்கு வெளியே அதிக நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாக இலங்கை திகழ்கிறது. *(R.Krinamoothy, Sangam age Tamil Coins, pp.2-23)*ஒரு நாட்டில் வெளிநாட்டு நாணயம் சமகாலத்தில் அல்லது சற்று காலம் தாழ்த்தி இன்னொரு நாட்டில் புழக்கத்தில் இருப்பதற்கு அரசியல் பண்பாட்டு தொடர்புடைய ஒரு காரணமாக இருப்பினும் அதில் வர்த்தகம் முக்கிய காரணம் ஆகும். மேற்கூறப்பட்ட சான்ற ஆதாரங்களில் இருந்து சங்ககாலத்தில் தமிழ்நாட்டு வணிகர்களின் நடவடிக்கைகள் இலங்கையில் ஏற்பட்டிருந்த மயில் தெளிவாக்குகிறது.

திருப்பரங்குன்றம் பிராமி இலங்கையைச் சார்ந்த வணிகன் ஒருவன் தமிழ்நாட்டில் உள்ள சமணத்துறவிக்கு அளித்த தானம் பற்றி கூறுகிறது. இச்சான்றுகள் வர்த்தக நடவடிக்கைகளை மட்டுமின்றி தமிழ்நாட்டில் இருந்து ஏற்பட்ட அரசியல் பண்பாட்டு செல்வாக்கையும் காட்டுகிறது.

தமிழக தொல்பொருள் ஆய்வுத்துறை புகாரில் கிழ்வெளி என்ற இடத்தில் செய்த அகழ்வாய்வில் படகு துறை ஒன்று கிடைத்துள்ளது. இப்பகுதிக்கு பழங்காவேரி என்ற பெயரும் இருந்துள்ளது பிற்காலத்தில் காவிரி திசை மாறி தெற்கில் ஓடுகிறது. மேலும் கீழையூரில் கண்டுபிடிக்கப்பட்ட படகுத்துறையும் ஒரே ஆற்றின் கரையில் அமைந்திருக்க வாய்ப்புள்ளது. இங்கிருந்து பொருட்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் பிற நாடுகளில் இருந்து வரும் பொருட்களை இறக்குமதி செய்யவும் அமைந்துள்ளது. இதற்கு வடக்கு பகுதியில் வீர மேட்டிருப்பு மாந்தங்காடு மண்டபக்காடு போன்ற ஊர்களை வைத்து இங்கு வணிகப் பொருட்கள் இப்படகு துறைகளின் வழியாக கப்பலுக்கு கொண்டு செல்லவும் அங்கிருந்து கொண்டு வரவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பல்லவன் ஈஸ்வரத்தில் செய்த அகழ்வாய்வில் குஷானர்கால சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன இவற்றால் வட இந்திய வணிகர்களும் பூம்புகார் க்கு வந்து வணிகம் செய்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. வெள்ளையன் இருப்பு வானகிரி போன்ற இடங்களில் மற்ற பகுதிகளை விட அதிக அளவில் மணிகள் கிடைத்துள்ளன இங்கு பணிகள் செய்யும் தொழில் கூடங்கள் இருந்திருக்க வேண்டும் மேலும். கொடுமணல் அகழ்வாய்வில் விலை உயர்ந்த கல்மணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கல் மணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதும் தெரியவருகின்றது. வெளிநாடுகளுக்கு நாகரீகமும் பண்பாடும் பாண்டிய நாட்டில் உள்ள பட்டினங்கள் தமக்குள்ளும் வழங்க அரபுக்

கடற்கரைகளில் அமைந்த பிற துறைமுகங்களோடும் இலங்கை கிழக்காசிய நாடுகள் மேலை நாடுகள் ஆகியவற்றில் உள்ள துறைமுகங்களோடும் பல்வேறு தொடர்புகள் கொண்டிருந்தன. இவற்றின் சிறப்பை அறிந்து கொள்வதற்கு தொண்டி பெரியப்பட்டினம் பழைய காயல் போன்ற பல இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகளும் மேற்பரப்பு ஆய்வுகளும் துணை புரிகின்றன. மேலும் அல்பருணி மார்க்கப்பலோ இபின் பதுதா போன்ற பல்வேறு வெளிநாட்டவர் குறிப்புகள் கல்வெட்டுகள் இலக்கியங்கள் மேற்பரப்பு ஆய்வில் கிடைத்த பண்டைய நாணயங்கள் போன்ற தொல்பொருட்கள் துணை நிற்கின்றன. ( *Nilakanta Sastri. K.A., Foreign Notices of South India, pp. 265 — 282,294- 296))*

**அயல் நாட்டு வணிகத்தில் தாவரப் பொருட்கள்**

தமிழக வரலாற்றில் தொடக்க காலத்தில் இருந்து அயல்நாட்டு வாணிபம் சிறப்புடன் நடைபெற்று வந்துள்ளது. வணிகத்தில் முக்கியமாக தாவரப் பொருட்கள் ஏற்றுமதி ஆயின. தமிழகத்தில் கடல் சார்ந்த வணிகம் சிறப்பாக நடைபெற்றது அவ்வாறு நடைபெற்ற கடல் வணிகமே வெளிநாடுகளுடன் வணிக தொடர்பு கொள்ள முக்கிய ஊடகமாக அமைந்தது எனலாம்.

**ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள்**

இந்திய பொருட்களான மிளகு, ஏலம், வாசனை திரவியங்கள், தந்தம் சந்தனம் துணி பட்டு முத்து மணிகள் இரும்பு போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்ட ன. ரோம நாட்டில் இருந்து மது மது குடுவைகள் அழகு பொருட்கள் கண்ணாடி விளக்குகள் வெள்ளி ஈயம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. ரோம பேரரசு டைபீரியஸ் பொ.ஆ.14-37 ரோம நாட்டிற்கு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவு கூடியதையும் அதனால் ஏற்பட்ட வணிக ஏற்றத்தாழ்வையும் கடுமையாக குறை கூறியுள்ளார்.*(R.C. Majumdar Classical Account of India, p.274)* இக்குறிப்புகளை உறுதிப்படுத்தும் வகையில் ரோமானிய தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் தென்னிந்தியாவில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.*(Ibid, pp. 304,305).)*

**வியன்னா பேப்பரஸ் வணிக உடன்படிக்கை**

வணிகம் மேற்கொண்டது மட்டுமல்லாமல் வணிக ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டுள்ளது. பொ.ஆ.2ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சேரர் துறைமுகமான முசிறிக்கும் ரோமானியர் துறைமுகமான அலெக்சாண்ட்ரியாவிற்கும் நிகழ்ந்த வணிக பரிமாற்றம் குறித்து ஒரு உடன்படிக்கை வியன்னஅருங்காட்சியகத்தில் உள்ளது. இவ் உடன்படிக்கையை ஆய்வு செய்த காசன் என்பவர் 11 பொருட்களின் தற்போதைய மதிப்பை கணக்கிட்டால் நைல் நதி சமவெளியில் 2400 ஏக்கர் பரப்பளவு உள்ள பண்ணை நிலங்களை விலைக்கு பெற முடியும் எனக் கூறியுள்ளார். இதில் ஏற்றுமதி பொருட்கள் வணிக மையங்கள் துறைமுகங்கள் பற்றி

குறிப்பிடப்பட்டுள்ளன. *(L.Casson,( 1997) Ancient Navay Technology and the Route of India, Vimala Begley and R.De.Puma(ed), Rome and Indian the Ancient Sea Trade,)*

**வணிகப் பொருட்கள்**

இடைக்காலத்தில் உள்நாட்டு வணிகம் நகரத்தாரிடம் அவர்களுடன் இணைந்து நின்ற திசையாயிரத்து ஐநூற்றுவர் போன்ற பன்னாட்டு வணிக குழுவினர் கையிலும் இருந்தது குறிப்பாக பாண்டிய நாட்டில் பல்வேறு இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் இவர்கள் வணிகம் செய்த நெல், அரிசி, உப்பு, அவிழாகட்டு, பயிறு, அவரை, துவரை, ஆமணக்கு கொட்டை, எள், கடுகு, சீரகம், வெங்காயம், புளி, கருப்பு, கட்டி , மஞ்சள், பாக்கு, மிளகு, சுக்கு, தேன், சந்தனம், அகில், பன்னீர், கற்பூரம், சாந்து,புணுகு, கஸ்தூரி, ஜவ்வாது, புடவை, பருத்தி புடவை, பட்டு புடவை, கொள்ளை பட்டு,கணபம், இரும்பு, செம்பு, வெண்கலம், குதிரை, யானை, ஒட்டகம்,மயிர், முத்து, சிற்பி, மணிகள் முதலிய சரக்குகள் பற்றி தெரிவிக்கின்றன. *( SII.Vol.VIII, No. 42, 428, 430, ARE.1915, No.50,1959,No.49, 1926-27, No. 598 , ARE.1949-50, No.370 )* பொருட்கள் கடற்கரை பட்டினங்களில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட வணிக சரக்குகளாக இருக்க வேண்டும். இவற்றில் சில உள்நாட்டிற்கும் சில வெளிநாட்டிற்கும் கடல் வழியாக அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

**இரும்பு**

ஐந்து வகை இரும்புகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. கேரளாவில் செம்பாரங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இது இரும்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். மேலும் இரண்டு பூட்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் கேரளாவில் சில பகுதிகளில் பழங்கால அமைப்புடைய இரும்பு கூட்டுகள் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**பித்தளை பொருட்கள்**

பெண் யக்ஷஷி மேலைக் கடற்கரையில் ஒரு வெண்கலை பித்தளை தொழிற்சாலையை வைத்திருந்ததாக தெரிவிக்கின்றது. தென்னிந்தியாவில் குறிப்பாக கேரளாவில் வெண்கல பித்தளை தொழில் இரும்பு காலத்தில் இருந்தே சிறந்து விளங்கியது இங்குள்ள கைவினைஞர்களின் திறமை குறைந்த உற்பத்தி செலவு தேன்கிழக்கு ஆசியாவில் இருந்து எளிதில் கிடைத்த மூலப்பொருட்கள் போன்றவை இவர் இவை இங்கு தொழிலை நிறுவுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

**பாக்கு**

சிவப்பு வெள்ளை பாக்கு வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக கெனிஷா ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வகை பாக்குகள் இன்றும் கேரளாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**ஏலக்காய்**

ஏலக்காய் கேரளாவில் மலைப்பகுதிகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருளும் அக்காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது புலன் ஆகிறது. மேலும் தேங்காய் துணியை மருந்து பொருட்களும் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.( *E.F. Rain Lev and Zohar Amar, Practice versus Theory : Medieval Materia media Ascending to the Cairo Geni Zoh, Medial History, Vol.51,2007,pp.507-526* )

**இறக்குமதி பொருட்கள்**

**தாள்**

இந்தியாவில் எழுதுவதற்கு ஒலைச்சுவடிகளை பெரிதும் பயன்பட்டன எனவே தாளில் எழுதி பழக்கப்பட்ட வெளிநாட்டு வணிகர்கள் தாளை இறக்குமதி செய்தது இதன் வழி புலனாகின்றது.

**டாபிகி துண்டு**

டாப்பிக்கி துண்டு ஒரு வகையான விலை உயர்ந்த லினமும் பட்டும் இணைந்து நெய்யப்பட்ட துணியாகும் இவ்வகை துண்டுகள் பெண் யெஷ்வின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வரவழைக்கப்பட்டது. மேலும் சர்க்கரை உலர்ந்த திராட்சை ஆகியவையும் இறக்குமதி செய்யப்பட்டதாக கடிதங்கள் குறிப்பிடுகின்றன.

**வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட தாவரங்கள்**

**தென்னை**

தாவரங்களில் முக்கியமான எண்ணெய் பிலிப்பைன்ஸ் தீவுகளில் தோன்றி கேரளத்தையும் தமிழ்நாட்டையும் அடைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. வட இந்தியாவிற்கு தெற்கில் உள்ள பிலிப்பைன்ஸ் பசிபிக் தீவுகளின் வழியாக தென்னை இயல்பு தாவரமாக வளர்கின்றன. அங்கிருந்து கடல் வழியாகவோ வாணிவும் வழியாகவோ இலங்கையையும் கேரளாவையும் அடைந்திருக்கலாம். பொ.ஆ.6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்க காலத்தில் கோயில் வழிபாடுகளுக்கு தேங்காய் பயன்படுத்தியதற்கான குறிப்புகள் ஏதும் இல்லை தென்னை பிற்காலத்தில் இறக்குமதியாகி பயன்படுத்திருக்கலாம். (கு.வி.கிருஷ்ணன், தமிழரும் தாவரமும் 2007 ப.117) கேரளாவில் துறைமுக நகரமான பட்டணத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் தேங்காய் சில்லுகள் கிடைத்துள்ளன பிறகு இடைக்காலத்தில் தேங்காய் உடைத்தல் இளநீர் வழங்கப்பட்ட செய்தி கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படுகின்றன.

**மறுதோன்றி (மருதானி)**

இதன் தாயகம் ஆப்பிரிக்கா ஆகும். வட ஆற்காடு மாவட்டம் உதயேந்திரத்தில் உள்ள இரண்டாம் நந்திவர்மனின் 21 ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ.752) செப்பேட்டில் மறுதோன்றியை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.(பல்லவர் சேன்போடு முப்பது, உதயேந்திரம் செப்பேடு, ப.136. )

**பருத்தி**

பருத்தி பாண்டியர் கால கல்வெட்டுகளில் காணப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டம் திருவரக்குளம் ஹரதீர்த்தேஸ்வரர் கோயிலில் உள்ள வீரபாண்டியனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திருவரங்கு உடைய நாயனாருக்கு குடிகாடு புஞ்சைகளை சிவபுராணர் கைக்கோளர் இடையர் கொல்லர்கள் பெற்றுக் கொண்ட நீர் நிலம் சங்கனூர் மாநிலத்தில் நடத்தப்பட்டதற்கு 60 காசு வசுளிக்கப்பட்டுள்ளன. (IPS.No.434)

**தேங்காய் எண்ணெய்**

தேங்காய் உற்பத்தி அதிக அளவில் இருந்ததால் தேங்காய் எண்ணெயும் பயன்பாட்டில் இருந்திருக்கலாம் என்பதையும் விஜயநகர் காலத்தில் தேங்காய் கொப்பரை ஏடன் துறைமுகம் வழியாக மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட செய்திகளின் வாயிலாக தென்னந்தோப்புகள் அதிக அளவில் தமிழ்நாட்டில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. (கோ. தங்கவேலு, தமிழ் சமூகம் பண்பாட்டு வரலாறு, தொகுதி.2, ப.59.)

**மிளகு**

சங்ககாலத்தில் மிளகு மிகவும் பரவலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மிளகு உணவுப் பொருளாகவும் மருந்தாகவும் பயன்பட்டது மிளகு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. முசிறியில் இருந்து யவனர் கப்பல்கள் பொன் கொண்டு வந்து கறியுடன் என்ற மிளகுடன் சென்றனர் என அகநானூற்றின் பாடல் 149 ஆவது பாடல் குறிப்பிடுகின்றது. கிரேக்க ரோமானிய குறிப்புகளானின் டாலமி ஆகியோரும் இந்தியாவில் இருந்து மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதை குறிப்பிடுகின்றனர். (வி.எஸ்.வி.ராகவன், பெரிப்ளூஸ், ப. 197- 234) கிழக்கு கடற்கரையில் உள்ள காவிரி பூம்பட்டினத்தில் மிளகு வந்ததாக காலின் வந்த கருங்குழி மூடை என்று பட்டினப்பாலை குறிப்பு உணர்த்துகிறது பட்டினப்பாலை(186) குறிப்பிடுகிறது. சங்க இலக்கியங்களில் கறி என்று 20 இடங்களிலும் மிளகு வாணிகப் பொருளாக இரண்டு இடங்களிலும் இடம்பெற்றுள்ளன. சீனர் மலையாள நாட்டு மிளகாய் அதிக அளவில் வாங்கினர் என்பதை தாலமி மார்க்க போலோ ஆகியோரின் குறிப்புகளால் அறிய முடிகிறது. (மேலது, ப.197) ரோமானியர்கள் கடல் வணிகத்தில் மிளகை முக்கிய வணிக பண்டமாக இருந்துள்ளது.(ஆவணம் இதழ்-19, 2008, பட்டணம் அகழ்வாய்வு ,ப.138. )

கிழங்கு பொருட்களான இஞ்சி, மஞ்சள் மற்றும் இலவங்கம் ஏலக்காய், மிளகு போன்றவைகள் உணவிற்கு மனமும் சுவையும் ஊட்டும் நறுமண பொருட்கள் ஆகும். இவை தமிழகத்தில் பயிரிடப்பட்டன தேக்கு கருங்காலி மரங்கள் ஏற்றுமதி ஆயின பொதிகை மலையிலிருந்து சந்தன மரமும் ஏற்றுமதி செய்யப்பட்டது.(கா.திருநாவுக்கரசு தமிழர் பண்பாடு , ப.28 )

**லவங்கம்**

லவங்கமும் லவங்க எண்ணெயும் ரோமநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. (வி. எஸ். வி.இராகவன், பெரிப்ளூசு, ப. 293.)

**மரங்கள்**

வர்த்தகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட மரங்களாவண கருங்காலி செம்மரம், தேக்கு சந்தன மரம், செஞ்சந்தனம் மற்றும் அகில் பட்டை ஆகியவைகளும் தேங்காய் எண்ணெய் மற்றும் திணை சாதிக்காய், போன்றவைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன இவ்வாறான தாவர பொருட்களை வணிகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. (கா.கோவிந்தன் ,தமிழர் வரலாறு, ப.145 -147)

**புட்டக விலை**

புட்டக விலை என்பது துணிகள் விற்போர் மீது செலுத்தப்பட்ட ஒருவகை வரி ஆகும்.(ஆசிரியர் குழு, பல்லவர் பாண்டியர் காலம், தொகுதி -1,ப.391) காரைக்கால் — பாண்டிச்சேரி அருகில் உள்ள நந்திவர்மனின் 22 ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ.754) காசாக்குடியில் செப்பேட்டில் புட்டக விளையும் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.(பல்லவர் செப்பேடு முப்பது, காசகுடி செப்பேடு,ப.180)

**ஏற்றுமதியில் துணிகள்**

விஜயநகர பேரரசு காலத்தில் கீழே துறைமுகமான புலிகாட்டில் இருந்து அனுப்பப்படுகின்ற துணிகளில் அச்சிடப்பட்டு மலக்கா, பெரு, மலபார் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனர். செங்கல்பட்டு மாவட்டம் நாகலாபுரம் வேத நாராயண சுவாமி கோயிலில் உள்ள கிருஷ்ணதேவராயரின் பொ.ஆ.1521 ஆம் ஆண்டு கல்வெட்டில் பழவேற்காடு துறைமுகங்களில் இருந்து தொங்கு கப்பலில் ஏற்றுகின்ற புடவை கட்டுக்கு பணம் ஒன்றும் பெறப்பட்ட சரக்குக்கு பணம் காலும் செலுத்தப்பட்ட குறிப்பு உள்ளது.(SII.Vol.XVII,No.679) பழவேற்காடு மயிலாப்பூர் ஆகிய துறைமுகங்களில் இருந்து வண்ண ஆடைகள் மலகா, பெரு, சுமத்ரா ஆகிய நாடுகளுக்கு ஏற்றமதி செய்யப்பட்டுள்ளன. பழவேற்காடு சிறந்த துறைமுக நகரமாகவும் விளங்கியதையும் தொங்கு கப்பல் சீனாவை சேர்ந்தது என்பதையும் துணிகளின் ஏற்றுமதியை பற்றி விளக்குவதாய் கல்வெட்டு குறிப்புகள் அமைந்துள்ளன.

பட்டினங்கள் ஆறுகள் ஓடைகள் போன்றவை கடலோடு கலக்கும் இடங்களில் அவற்றின் வழியாக மரக்கலன்கள் உள்நாட்டிற்குள் வந்து போகும் முறையில் இயற்கை அமைப்புடைய இடங்களிலேயே அமைந்திருந்தன. பட்டினம் என்ற சொல் துறைமுக வணிக சமூக நகரம் என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு அரச மரபினரின் பெயர்களே பெரும்பாலும் இடம்பெற்றுள்ளமை அரசுக்கு இப்பட்டினங்களில் மீது இருந்த நாட்டத்தையும் ஆளுமையையும் வெளிப்படுத்துகிறது. பட்டினங்களின் வளர்ச்சி பாண்டிய நாட்டில் முற்கால பாண்டிய பேரரசு காலத்தில் உச்சகட்டத்தினை ஏற்றி உள்ளது இவை கீழநாடுகள் மேலை நாடுகள் ஆகியவற்றுடன் வணிகத்தின் வழி நாகரீகம், பண்பாடு முதலிய பன்முக தொடர்புகள் கொண்டவையாக விளங்கி உள்ளன.

தமிழ்நாட்டின் வரலாற்றில் வணிகம் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது. உள்நாட்டு வணிகத்தைத் தாண்டி இலங்கை, ரோம், கிரேக்கம், கிழக்காசிய நாடுகள் போன்ற வெளிநாடுகளுடனான வணிகம் தமிழகத்தை சர்வதேச வணிகத்தில் முக்கிய மையமாக மாற்றியது. தொல்லியல் சான்றுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவை இந்த வணிகத் தொடர்புகளை உறுதிப்படுத்துகின்றன. மிளகு, ஏலம், பட்டு, மணிகள், இரும்பு போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன; மது, கண்ணாடி, வெள்ளி, தாள், விலை உயர்ந்த துணிகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. பூம்புகார், நாகூர், நாகப்பட்டினம்,கோட்டைபட்டினம், தேவிபட்டினம் போன்ற துறைமுகங்கள் கடல்சார் வணிகத்தின் முக்கிய மையங்களாக இருந்தன. வியன்னா பேப்பரஸ் வணிக உடன்படிக்கை, சேரர் மற்றும் ரோமர் இடையேயான உறவுகளை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு, தமிழர் வணிகர்கள் கடல்சார் வணிகத்தில் முன்னோடிகளாக இருந்து, உலகளாவிய பரிமாற்றங்களை உருவாக்கி, தமிழகத்தின் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றனர். வணிகம் தமிழகத்தின் அடையாளத்தையும் அதன் பண்பாட்டு செல்வாக்கையும் உலகளவில் பரப்பியது.

**நோக்கீட்டு நூல்கள்**


அதியமான். நா., ஜெயக்குமார். பா.,(தமிழகக் கடல்சார் வரலாறு அண்மைக் கால ஆய்வுகள் (ந.அதியமான், பொ.ஜெயக்குமார்),தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2006

ஆசிரியர் குழு, பல்லவர் பாண்டியர் காலம், தொகுதி -1, தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை, 1990

ஆவணம் இதழ்-19, தமிழக தொல்லியல் கழகம், தஞ்சாவூர்,2008

இராகவன்,வி.எஸ்.வி., பெரிப்ளூஸ், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1997

கிருஷ்ணன்.கு.வி.,தமிழரும் தாவரமும், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, 2007

கோவிந்தன்.கா.,தமிழர் வரலாறு, கௌரா பதிப்பகம், சென்னை, 2014

தங்கவேலு. கோ., தமிழ் சமூகம் பண்பாட்டு வரலாறு, தொகுதி.2, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2008

திருநாவுக்கரசு. க.த., தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,1987

பல்லவர் செப்பேடுகள் முப்பது, சுப்பிரமணியம். தி.நா., உலக தமிழராய்ச்சி நிறுவணம், சென்னை,1966

புஷ்பரத்தினம்.ப., பூ நகரில் கிடைத்த அரிய சங்க கால நாணயங்கள், ஆவணம் இதழ்-9, தமிழக தொல்லியல் கழகம் தஞ்சாவூர்,1998

*Annual Report on Indian Epigraphy,.1915, No.50,1959,No.49, 1926-27, No. 598 , ARE.1949-50, No.370 679, Archaeological Survey of India, New Delhi*

*Casson. L., Ancient Navay Technology and the Route of India, Vimala Begley and R.De.Puma(ed), Rome and Indian the Ancient Sea Trade, Oxford University Press, Delhi, 1997*

*Connigham, R.A.E. Passage to India Anuradhapuram and ist Early use of Bahmi Script, in Cambridge Archaeological Journal Vol. VI, 1996*

*Inscription of Pudukkottai State, The Commissioner of Museums, Government Museum, Chennai, 1929, 2002RP*

*Krinamoothy. R., Sangam age Tamil Coins, Genet publication,Madras,1997*

*Mahadevan. I, Recent Epigraphical Evidence for Ancient Tamil Contacts Abroad, Thainayagam Foundation Trust, Colombo,*

*Majumdar. R.C., Classical Account of India, irma K.L. Mukhopadhyay, Cullutta, 1960*

*Nilakanta Sastri. K.A., Foreign Notices of South India, University of Madras, Madras, 2001(3rd)*

*Rain Lev and Zohar Amar. E.F., Practice versus Theory : Medieval Materia media Ascending to the Cairo Geni Zoh, Medial History, Vol.51,2007*

*Schoff.W.H., Travel and Tread is the Indian Ocean by a Merchant in I st Centaury, Oriental Book ,1974*

*South Indian Inscriptionn Vol.XVII,(No.42, 428, 430, Archaeological Survey of India, New Delhi*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com